# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.35/2026**

**2026-ம் ஆண்டு மே திங்கள் 07-ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 01-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | ராஜேந்திரன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | வெள்ளப்பன் | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை காவல் நிலையம் | வயது | - | 57/2025 |
| சாதி | - | | | | |

<u>07.05.2026</u>

(அரசு தரப்பில் BNSS பிரிவு 348-ன் கீழ் மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டுசாட்சி கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.)

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது வால்பாறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரி திரு.முத்துக்குமாரசாமி சிறப்பு உதவி ஆய்வாளர் தற்போது அயல்பணி காரணமாக பொள்ளாச்சி சென்றிருப்பதாலும், நீதியின்நலன் கருதியும், நீதிமன்றநேரத்தை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும் நான் நீதிமன்ற பணிகளை கவனித்து வருவதாலும், அவருக்கு பதிலாக நான் சாட்சியமளிப்பதற்கு BNSS பிரிவு 348-ன் கீழ் மனுதாக்கல் செய்து நீதிமன்ற அனுமதியுடன் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கின்றேன். நான் தற்போது வால்பாறை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.01.2026-ம் தேதி திரு.முத்துக்குமாரசாமி சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் பணியில் இருந்த போது, அவர்களுக்கு தலைமைக் காவலர்கள் 1360 திரு.அருண்குமார் மற்றும் 1199 திருராஜன் ஆகியோர்களுடன் மதுவிலக்கு, சூதாட்டம், கஞ்சா ஆகிய குற்றங்கள் நடைபெறுவதை தடுக்க நிலைய சரகத்திற்குட்பட்ட வால்பாறை டவுன், புதுத்தோட்டம், காமராஜ் நகர் ஆகிய பகுதிகளில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது ரொட்டிக்கடை ஜங்கில் ெஹஸ்ட் ஹவுஸ் அருகில் வந்தபோது அங்கு இருந்த நபர் பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறாகவும், அச்சுறுத்தும் வகையிலும் மது அருந்திக்கொண்டிருந்தவர் தங்களை கண்டதும் கையில் வைத்திருந்த மதுபாட்டிலை தூக்கி வீசிவிட்டு அவ்விடத்தில் இருந்து செல்ல முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்குபின் முரணாக பதில் அளித்தவர் இறுதியில் தனது பெயர் இஸ்மாயில் (வயது 43), த/பெ.ஹம்சா, கோயிலண்டிபீச் ரோடு, கோழிக்கோடு, கேரளா மாநிலம் என்று கூறியவரை காரணம் கூறி 13.15 மணிக்கு கைது செய்துள்ளார். பின்னர் 13.45 மணிக்கு எதிரியை நிலையம்

கொண்டு வந்து நிலைய குற்ற எண் 02/2026 ச/பி 4-A TNP Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். **(அவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் சாட்சிகள் தலைமைக் காவலர்கள் 1360 திரு.அருண்குமார் மற்றும் 1199 திரு.ராஜன் ஆகியோரை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்துள்ளார். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து 01.01.2026-ம் தேதி எதிரி மீது ச/பி 4 -A TNP Act-ன் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(ஒப்பம் திருமதி. N. மீனாட்சி BA., BL.,)**
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.